**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4629

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.11.2021

Accepted: 22.12.2021

Published: 01.01.2022

Citation:
Jaber Sadiq Ali, M. "Natrinaiyil Anangu." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 76–81.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4629

*Corresponding Author:
jafarsadiq83@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Natrinaiyil Anangu

**Dr. M. Jaber Sadiq Ali**
*Assistant Professor, Department of Tamil*
*New College, Chennai, Tamil Nadu, India*
https://orcid.org/ 0000-0002-0297-5237

**Abstract -** Sangam literature is rich in songs of forest. Words have shown us the culture of time and history. The songs in the Sangam literature, which are the most thought-provoking books on romance, have given us new research material. The novel is a book full of ideas, scenes and determinations that come to mind in the very first line of the stand-up narrator.

**Keywords:** Sangam Literature, Notes on Sangam in Sangam Literature, Anangu, Beauty, Fear, Sadness-Use in Divine Items, Veer Deity, Anatomical Knowledge by Pot.

**References**

1. Thirukural, 1081.
2. U.Ve.Sa, Manimegalai Moolamum Arumbatha Uraiyum,.
3. Pinnathur A.Narayanasamy Iyer, Natrinai Urai, Kazhaga Pathippu,.E (Song 9)
4. Pinnathur A.Narayanasamy Iyer, Natrinai Urai, Kazhaga Pathippu,.E (Song 288)

# நற்றிணையில் அணங்கு

*முனைவர் மு. ஜாபர் சாதிக் அலி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
புதுக் கல்லூரி, சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்க இலக்கியமான நற்றிணையில் அணங்கு பல்வேறு பொருட்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.அழகு, அச்சம், வருத்தம், தெய்வம் போன்ற பொருள்களில் குறிப்பிடும் அணங்கு பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், அணங்கு, அழகு, பயம், நற்றிணை, வீர தெய்வம்.*

சங்க இலக்கியம் வளமும் வனப்பும் உடைய பாடல்களை உடையது. நற்றிணையில் 'அணங்கு' எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ள திறம் ஆய்விற்குரியது.

சங்க இலக்கியத்தில் அணங்கு என்ற சொல் பல இடங்களில் பயின்று வருகிறது. அணங்குதல் என்ற சொல் வருத்தல், வருந்தல் ஆகிய பொருட்களில் வருகிறது. அதிகமாக வருத்துதலைச் செய்யும் பெண் தெய்வத்தை அணங்கு என்றே அழைத்தனர். சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியானது, வருத்தம், நோய், அச்சம், மையநோய், கொலை, தெய்வம், தெய்வமகள், தெய்வமாதர், வெறியாட்டு, சண்டாளன், அழகு, வடிவு, குட்டி போன்ற பொருள்களில் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறுகிறது.

நற்றிணையில் பல இடங்களில் அணங்கு என்ற சொல் வருகிறது. அழகிய பெண் உருவத்தில் தோன்றி காண்பார்க்குக் காமநோய் தந்து தீண்டி வருத்தும் தெய்வம் என்ற பொருளில் வள்ளுவர்கூட, காமத்துப் பாலின் முதல் குறளில் தகையணங்கு உறுத்தல் என்ற அதிகாரத்தை அமைக்கிறார். தலைவியின் அழகு எவ்வாறெல்லாம் வருத்தத்தை ஏற்படுத்துகிறது என்பதையே இந்த அதிகாரத்திலுள்ள குறள்களில் கூறுகிறார்.

> **'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
> **மாதர்கொல் மாலுமென் நெஞ்சு'[1]**

பரிமேலழகர் இதற்கு உரை கூறும்போது 'தெய்வமகள்' என்றும் மணக்குடவர் 'தெய்வம்' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

அணங்குடை அவுநர் (பதிற்று.11), அணங்குடை தடக்கையர் (பதிற்.62) அணங்குடை யாளி (பெரும்.258), அணங்குடை குருளை (பொருநர் 139), அணங்குடைத் துப்பு (மதுரைக்.140) என்பன போன்ற இடங்கள் அணங்கெனும் சொல்லிற்கான சான்றுகள்.

## நற்றிணையில் அணங்கு

நற்றிணையில் அணங்கு என்ற சொல் இடம்பெறும் பாடல்களில் அச்சொல் குறிக்கும் ஒவ்வொரு பொருளையும் அதன் சூழலோடு காண்போம்.

### அ) அழகு என்னும் பொருள்

> **'சுணங்கு அணி வனமுலை அணங்கு கொளத் திமிரி' (9:6) (பாலை)**

கண்டாரை வருத்தும் அழகு உடைய வனப்புள்ளவளாக தலைவி இருக்கிறாள். நற்றிணையில் இந்த ஒரு இடத்தில் மட்டுமே அழகு என்ற பொருளில் வருகிறது. இது அழகால் வருத்தமுறும் காமநோயை இங்குக் குறிக்கிறது. இது கண்ணால் கண்டுணரும் காட்சி இன்பத்தைக் குறிக்கிறது. இதற்கு உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், "சுணங்கு நிரம்பிய அழகிய முலையிலே அதன் வீற்றுத் தெய்வம் சிறப்போடு இருக்குமாறி அப்பி இருப்பது"[3] என்று குறிப்பிடுகிறார்.

"வீற்று தெய்வம்" என்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி 'உடலில் அமர்ந்து காட்சியின்பத்தை உண்டாக்கும் தெய்வம் என்று பொருள் தருகிறது. அதாவது தெய்வம் ஏறிய பெண் அழகுடன் வெளிப்படும் தன்மை. இப்பாடலில் வரும் அணங்கு என்ற சொல்லிற்கு அழகு, தெய்வம் என்ற இருபொருள்களைப் கு.வெ.பாவும் பின்னத் தூராரும் கூறுகின்றனர்.

**ஆ) வருத்துதல் பொருள்**

**'அணங்கல் ஓம்புமதி, வாழிய நீ என' (358:5) (நெய்தல்)**

வாய்மை தவறிய தலைவனை வருத்த வேண்டாம் என தெய்வத்திடம் கேட்கும் தலைவி.

**மார்பு தர வந்த படர்மலி அருநோய் நின் அணங்கு அன்மை அறிந்தும்... (34:6,7) (குறிஞ்சி)**

தலைவியின் உடல் மெலிவிற்கு (வருத்தம்) காரணம் முருகவேள் அல்ல, தலைவனே ஆவான் என தோழி உரைத்தல்.

**"கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே"(39:11) (குறிஞ்சி)**

தலைவியினுடைய கரும்பு போன்ற தோள்கள் மன்மதனின் அம்புகள் போல தலைவனை வருத்துகின்றன.

**'மார்பு அணங்குறுநரை அறியாதோனே?' (94:9) (நெய்தல்)**

தலைவனது மார்பின் மீது தலைவி கொண்ட காதலால் வருத்தமுறுகிறாள்.

**'பிணவுப்புலி வழங்கும் அணங்கு அருங்கவலை' (144:6)(குறிஞ்சி)**

யானையைக் கொல்லும் புலியின் பிளிறல் தலைவிக்கு வருத்தத்தை ஏற்படுத்துகிறது. மேற்கண்ட நற்றிணைப் பாடல்களில் அணங்கு எனும் சொல் வருத்தம் எனும் பொருளைத் தருகிறது. அவற்றுள் குறிஞ்சித் திணைப்பாடல்கள் மூன்றிலும் நெய்தல் திணைப்பாடல்கள் இரண்டிலும் அணங்கு இப்பொருளில் சுட்டப்படுகிறது. காதல் வருத்தமும் இரவுக்குறி பயம் தரும் வருத்தமும் இப்பாடல்களில் சுட்டப்படுகின்றன.

**இ)அச்சம் எனும் பொருள்**

**'நாகத்து அணங்குடை அருந்தலை உடலி' (37:8,9) (பாலை)**

வருத்தம் தரக்கூடிய நாகம், கார் கால இடிக்கு அச்சப்படும் என இரவுக்குறி மறுத்தல்.

**'அணங்குடை அரவின் ஆர் இருள் நடுநாள்' (168:8) (குறிஞ்சி)**

அச்சம் தரக்கூடிய பாம்புகள் அலையும் நள்ளிரவு. (இரவுக்குறி மறுத்தல்)

**'அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்' (282:5) (குறிஞ்சி)**

மூதறிவு மிக்க வேலன், வெறியாட்டுதலின் போது அச்சத்தைத் தரக்கூடிய கழங்குக் காய்களைச் சுழற்றி குறிசொல்வான்.

**'அருவி ஆர்க்கும் அணங்குடை நெடுங்கோடு' (288:1)(குறிஞ்சி)**

அருவி ஆரவாரித்து ஒழுகும் அச்சம்தரும் குன்றம்.

மேற்கண்ட பாடல்களில் பொருள்களின் மீதான அச்சத்தையே அணங்கு எனும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எதற்கெல்லாம்

மனிதமனம் அச்சப்படும் என்பதை அணங்கு எனும் சொல் காட்டுகிறது.

மூன்று குறிஞ்சித்திணைப் பாடல்களிலும் ஒரு பாலைத்திணைப் பாடலிலும் அச்சப்பொருளில் பயின்று வருகிறது.

**தெய்வம் எனும் பொருள்**

**'அணங்குஅறிகழங்கின்கோட்டம் காட்டி' *(47:8)* (குறிஞ்சி)**

தெய்வ நம்பிக்கையில் கழங்கு உருட்டி பார்த்தல்.

**'பெருங்கடல் பரப்பின் அமர்ந்து உறை அணங்கோ?' *(155:6)* (நெய்தல்)**

பெரிய கடற்பரப்பின் கண் விரும்பி உறையும் கடல்தெய்வமோ?

**'அணங்கொடு நின்றது மலை, வான்கொள்க என்' *(165:3)* (குறிஞ்சி)**

இம்மலையில் தெய்வம் தோன்றி நிற்கிறது. மழை பெய்தால் மலை குளிரும்.

**'பிற்றை அணங்கும் அணங்கும் போலும்? அணங்கி' *(376:10)*(குறிஞ்சி)**

தெய்வமும் (முருகவேள்) நிகழ்ந்த களவின் செயலறியாது, வேறு ஒன்றைக் கூறி துன்புறுத்தும்.

**'அணங்குடை அருஞ்சூள் தருகுவென் என நீ' *(386:6)* (குறிஞ்சி)**

தெய்வத்தை முன்நிறுத்தி சூளுரைத்தான் தலைவன்.

மேற்கண்ட ஐந்து பாடல்களில் அணங்கெனும் சொல் தெய்வத்தை உணர்த்தும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிஞ்சித்திணை பாடல்கள் நான்கிலும் நெய்தல் திணையில் ஒரு இடத்திலும் வந்தாலும் இப்பாடல்கள் தெய்வநம்பிக்கையையும்சுட்டிநிற்கின்றன.

பேய் எனும் பொருள்

**'அணங்கு கால் கிளரும் மயங்கு இருள் நடுநாள்' *(319: 6)* (நெய்தல்)**

பேய்கள் காற்றில் சுற்றும் இருளையுடைய நடுநிசி.

சங்க இலக்கியத்தில் பேய் பற்றிய குறிப்புகள் குறைவாகவே உள்ளன. 'பேயை' அணங்கு என்று குறிப்பிடும் வழக்கமும் குறைவாகவே இருந்திருக்கிறது. பேய்கள் குறித்த நம்பிக்கையும் அக்கால மக்களுக்கு குறைவாகவே இருந்திருக்கலாம்.

**அணங்கு அறிதலில் கழங்கு**

கட்டுவிச்சி எனப்படும் முதுபெண்டிரான குறிசொல்லும் பெண்ணை தலைவியின் வீட்டிற்கு அழைத்து முறத்தில் பிடிநெல்லை வைத்து எதிரே தலைமகளை நிறுத்தி தெய்வத்திற்குப் பிரப்பிட்டு வழிபாடு செய்து அந்த நெல்மணிகளை நான்கு நான்காகப் பிரித்து வைப்பர். எஞ்சியவை ஒன்றோ இரண்டோ மூன்றோ வரின் "முருகு அணங்கிற்கு" (முருகன் பயமுறுத்தியுள்ளான்) என்றும், இவை எஞ்சாமல் நான்கு மணிகள் இருந்து அவை ஒரு கூறானால் வேறு உடல்நோய் எனவும் கொள்வது பண்டைய மரபு.[4]

முருகு அணங்கிற்று எனில் உடனே வேலனை (முருகனுக்கு பூசை செய்யும் பூசாரி) அழைத்து வெறியாட்டு நிகழ்த்தி சிறப்பு செய்து பின்பு கழங்குபோட்டு குறிபார்ப்பது. இதனையே குறிஞ்சிப்பாடல் 286 கூறுகிறது.

**"செம்முது பெண்டிரொடு நெல்முன் நிறீஇக் கட்டிற் கேட்குமாயின்..
நெடுவேள் அணங்கிற்று என்னுங் கொலதுவே?" (குறிஞ்சி)**

இந்நிகழ்வின் தொடர்ச்சியாக வேலன்முன் கழங்குபோட்டுப் பார்ப்பதை 282வது பாடல் காட்டுகிறது. கழங்கு பயன்பாட்டளவில் மகளிர் ஆடும் கழங்கு, வேலன் உருட்டிப் பார்க்கும் கழங்கு என இரு வகைப்படும். கழங்கில் காணப்படும் குறியைப் பார்த்து "முருகு அணங்கிற்று" என்பான்.

**"காதலன் தந்தமை அறியாது உணர்ந்த
வணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்
கிளவியின் தணியின் நன்றுமன் சாரல்"
(குறிஞ்சி)**

அதாவது கட்டுவிச்சி சொன்ன குறியைச் சரியாகப் பார்ப்பதற்கு வேலன் வெறியாட்டுதல் நிகழ்த்தியிருக்கிறார்கள். தலைவி காதலில் விழுந்திருக்கிறாள் என்பதை வேலன் நேரடியாகக் குறிப்பிடுவதில்லை. அணங்கு ஏறியிருக்கிறது என்று சொன்னாலே தலைவி காதலில் விழுந்திருக்கிறாள் என்று பெற்றோர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதற்காகவே தோழி கட்டுவிச்சிக்கு விடைக்குறி கொடுக்கிறாள். வெறியாடும் வேலன் கூட தலைவியின் காதலுக்குத் துணைநிற்பதைப் பார்க்க முடிகிறது. வெறியாடுதல் மூலம் தலைவியின் மனநிலையில் ஒருவித அச்சம் ஏற்பட்டாலும் காதல் அவத்தையும் ஏற்படுத்தி அவள் வெளிப்படையாகப் பேசவும் தன் காதலில் முடிவுகள் எடுக்கவும் வெறியாடுதல் ஒரு வாயிலாக அமைகிறது. பின்பு காதலில் அறத்தோடு நிற்கிறாள் தலைவி.அதனால் பெற்றோர்களுக்குத் தலைவி மீது இரக்கம் ஏற்பட்டு காதலில் வெற்றி பெறுகிறாள். இல்லாவிடில் தலைவனுடன் உடன்போக்குச் செல்கிறாள். தலைவியின் காதல் வெற்றிக்கு அணங்கும் (முருகு) முக்கியப் பங்களிப்பாக இருக்கிறது என்பது உணரத்தக்கது.

கழங்கு மூலம் அணங்கறிதல் பற்றிய குறிப்புகள், ஐங்குறுநூறு (245, 246, 248, 249, 250), அகநானூறு (195-5) ஆகிய பாடல்களிலும் வருவதைச் சான்றாகக் கொள்ளலாம்.

அணங்கு என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ள பெரும்பான்மையான பாடல்கள் குறிஞ்சித்திணைப் பாடல்களாகவே இருக்கின்றன.குறிஞ்சிநில மக்களின் காதல் வாழ்க்கையில், அச்சுறுத்தும் அணங்கோ, தெய்வமோ, தேவதையோ முக்கியப் பங்காற்றுகின்றன. குறிஞ்சித்திணையில் அதிகமான இடங்களிலும் நெய்தல் திணையில் நான்கு இடங்களிலும் பாலைத்திணையில் இரண்டு இடங்களிலும் அணங்கெனும் சொல் பயின்று வருகின்றது. காடும் காடு சார்ந்த இடமாகிய முல்லையிலும் வயலும் வயல் சார்ந்த இடமாகிய மருதத்திலும் "அணங்கு" பயன்பாடு இல்லை.

## முடிபு

1. சங்க இலக்கியத்தில் அணங்கு என்ற சொல் பல இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. அச்சம், தெய்வம், தெய்வ மகளிர், பேய், அழகு, வருத்துதல் போன்ற பொருள்பட இச்சொல் பயன் படுத்தப்படுகிறது.
2. நற்றிணையில் அணங்கு எனும் சொல் மேற்கண்ட பொருள்களில் பயன் படுத்தப்படுகிறது.
3. குறிஞ்சித் திணையில் பத்து இடங்களிலும் நெய்தல் திணையில் நான்கு இடங்களிலும் பாலைத்திணையில் இரண்டு இடங்களிலும் வருகின்றது. முல்லை, மருதத்திணைப் பாடல்களில் பயன்படுத்தப்படவில்லை.
4. வீற்றுத் தெய்வம் (உடலில் அமர்ந்து காட்சியின்பத்தை உண்டாக்கும் தெய்வம்) பற்றிய குறிப்பு ஒரு பாடலில் சொல்லப்பட்டுள்ளது.
5. அணங்கேறி இருப்பதைக் கட்டுவிச்சி மூலமாகவும் வேலன் வெறியாடுதல் மூலமாகவும் அறிந்து தலைவியின் காதலை வெளிக்கொணருகின்றனர். இதற்கு நெல்மணிகளையும் கழங்குக்காய்களையும் பயன்படுத்தியிருக்கின்றனர்.
6. தலைவி காதல் வயப்பட்டதை வெறியாட்டும் வேலன் குறிப்பால் உணர்த்துகின்றானே ஒழிய நேரடியாகச் சொல்வதில்லை. தலைவி காதல்கொண்ட இடத்தையே முருகு அணங்கிய இடமாக வேலனை அறிவிக்கச் சொல்கிறாள் தோழி. தோழியின் பங்கு அளப்பரியது என்பதற்கு இது தக்கச் சான்றாகும்.
7. தலைவி அறத்தோடு நின்று தலைவனைக் கைபிடிக்கவும் உடன்போக்கு மேற்கொண்டு

காதலை நிறைவேற்றவும் அணங்கு ஒரு வாயிலாக உள்ளது.

8. தலைவிக்கு அணங்கு ஏற்படுகிறதேதவிர தலைவனின் மேல் அணங்கேறுதலும் வெறியாடுதலும் பற்றிய குறிப்புகள் இல்லை.

**குறிப்புகள்**

1. திருக்குறள். 1081
2. உ.வே.சா., *மணிமேகலை மூலமும் அரும்பத உரையும்*
3. பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்., *நற்றிணை உரை*, கழகப் பதிப்பு.
4. பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர்., *நற்றிணை உரை*, கழகப் பதிப்பு.